SOND

SOND Better World Movement

*இணைவோம். செயற்படுவோம். புதிய சமூகத்தினை உருவாக்குவோம்.*

*T.P:- 077-3314262* *E-Mail:-senthu@eureka.lk* *web:-www.sond.lk*

# மாதாந்த அறிக்கை

**மார்கழி, 2013**

## Social Organizations Networking for Development

**RKM Road**
**Akkaraipattu**

**No. 19, Saravana Road**
**Kallady Batticaloa.**

**60" Arasady Road**
**Jaffna.**

**18/3A Anai Road**
**Kaneshapuram**
**0772242401**

## இதழின் உள்ளே

1. அம்பாறை
2. யாழ்
3. மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களினுடைய செயற்பாடுகள்

# அம்பாறை மாவட்டத்தின் செயற்பாடுகள்

எதிர் காலத்தில் சிறந்த சூழலை உருவாக்கிக்கொள்வதற்கு உகந்த சமூகத்தினை கட்டியெழுப்புதல்.

**(Create a conducive Society for Good Environment for the Future).**

## 1. Impact Evaluation by Diakonia

**Diakonia** அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்டு **Ms.** சாரிகா மாறசிங்க அவர்களினால் நடாத்தப்பட்ட **Impact evaluation** ஆனது அக்கரைப்பற்று **SOND** அமைப்பில் **08,09/12/2013** அன்று நடைபெற்றது. முதல் நாள் கலந்துரையாடலும் மறுநாள் களவிஜயமும் நடைபெற்றது. அதன்போது கீழ்வரும் அமைப்புக்கள் மதிப்பிடலுக்கு உட்படுத்தப்பட்டது.

1. கண்ணகி விவசாய அமைப்பு
2. ஒருங்கிணைந்த விலங்குப் பண்ணை
3. ஆலையடிவேம்பு சிரேஸ்ட பிரஜைகள் சங்கம்
4. பட்டிமேடு மரம் வளர்ப்புத் திட்டம்
5. **PPDS, SEDO** ஆகிய நிறுவனங்கள்





## 2. உள்ளுர் உற்பத்திப் பொருட்கள் விநியோக நிலையம் -Shop for selling local products

உள்ளுர் உற்பத்தியாளர்களை ஊக்கப்படுத்தலை நோக்காகக் கொண்டு அக்கரைப்பற்று **SOND** அமைப்பானது அக்கரைப்பற்று சாகாம வீதியில் உள்ளுர் உற்பத்திப் பொருட்கள் விற்பனை நிலையம் ஒன்றினை ஆரம்பித்தலுக்கான முன்னேற்பாடுகளில் ஈடுபட்டுவருகின்றது.

எதிர் காலத்தில் சிறந்த சூழலை உருவாக்கிக்கொள்வதற்கு உகந்த சமூகத்தினை கட்டியெழுப்புதல்.

**(Create a conducive Society for Good Environment for the Future).**

### 3. நுன் கடன் திட்டம் Micro Credit

நுன் கடன் திட்டத்தினை ஆய்வு நோக்கத்தில் செயற்படுத்தி அதன் கற்றல்கள் அனுபவங்களை பரவலாக்கும் நோக்குடன் அக்கரைப்பற்று SOND அமைப்பானது PPDS, SEDO ஆகிய இரண்டு அமைப்புக்களையும் நிபந்தனைகளின் அடிப்படையில் தெரிவு செய்து திட்டத்தினை அமுல்படுத்துதல் தொடர்பான ஒப்பந்தங்களையும் கைச்சாத்திட்டுள்ளது. அதுமட்டுமல்லாமல் 20/12/2013 அன்று மேற்படி இரண்டு அமைப்பிற்கும் தலா 150,000 வீதம் நுண் கடன் திட்டத்தினைச் செயற்படுத்தலுக்காக உதவித் தொகையும் வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் பயனாளிகள் தெரிவு, வியாபாரத் திட்டத்தின் அடிப்படையில் தொழில் தெரிவு செய்தல் மற்றும் பயனாளிகளினுடைய அடிப்படைத் தகவலும் முழுமைப்படுத்தப்பட்டுள்ளது.





### 4. தங்கவேலாயுதபுரம் முன்மாதிரிப்பண்ணை.

SOND அமைப்பினால் திருக்கோவில் பிரதேசத்தில் அமைக்கப்பட்டுவரும் விவசாயப் பண்ணையின் துப்பரவு வேலைகள் மேற்கொள்ளப்பட்டது. அத்துடன் காணியின் சுற்றுவேலி அமைப்பதற்கான முன்னாயத்தங்களும் மேற்கொள்ளப்பட்டது.

இப் பண்ணையில் மரக்கறி, நிழல் மரங்கள், பழவகைகள் என்பவற்றின் நாற்று மேடையும். தென்னை. வாழை, மரக்கறிப் பயிர்கள் மூலிகைப்பண்ணை என்பன இயற்கை முறையில் இரசாயனப்பாவனையைத் தவிர்த்து செய்கை பண்ணப்பட உள்ளது. அத்துடன் நீர் சிக்கனம் வளப்பயன்பாடு, ஊடுபயிர்ச் செய்கை , புதிய பொருத்தமான தொழில் நுட்பம் என்பன அறிமுகம் செய்யப்பட உள்ளது.





# நிதியின்றிய செயற்திட்டம்

அரச சார்பற்ற நிறுவன மென்றால் அது நிதியோடுதான் செயற்படும் என்ற மாயை கற்றவரிடையே கூட உள்ளது. இக் கருத்தினை மாற்றி நிதியின்றி சிலரின் நேரத்தையும் எமது வளத்தையும் பயன்படுத்திச் செய்யப்படும் கீழ்வரும் செயற்திட்டங்கள் இவற்றிற்கு நல் உதாரணங்களாகும்.

## சிறுவர் திட்டம்

சிறுவர் மேம்பாட்டினை மையமாகக் கொண்ட இச் செயற்பாட்டில் ஆலையடிவேம்பு, அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட தமிழ் , முஸ்லீம், சிங்கள இனத்தினைச் சேர்ந்த 11 ஆண், 19 பெண் உள்ளடங்கலாக 30 சிறுவர்கள் இச் செயற்பாட்டில் இணைந்துள்ளார்கள்.

## கலந்துரையாடல்கள்.

காந்தி கழக சிறுவா்களுக்கு ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் காலை 11.00 மணிக்கு பணியாளரான தி.ஜெனிதா அவா்களினால் SOND பயிற்சி மண்டபத்தில் நடாத்தப்பட்ட கலந்துரையாடலில் 30 பேர் கலந்து கொண்டுள்ளார்கள்.





### *சிறுவர்களினால் மேற்கொள்ளப்பட்ட விசேட செயற்பாடுகள்.*

1. சிறுவர்கழகத்தின் சிறுவர்களினால் ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் பிரிவில் நடமாடும் நூலகசேவை நடை பெற்றது இதில் 115 புத்தகங்கள் வழங்கப்பட்டது.
2. எமது அலுவலகத்தில் காணப்படும் இரு பக்கங்கள் பாவித்த தாள்களைக் கொண்டு காந்தி சிறுவர்கழக உறுப்பினர்களினால் 425 சிறுபைகள் தயாரிக்கப்பட்டுள்ளது.
3. சிறுவர்களின் வீட்டிற்கு அருகில் உள்ள நபர்களிற்கு (வாச்சிக்குடா,கோளாவில்,அக்கரைப்பற்று7பிரிவு, ஆலையடிவேம்பு) நடமாடும் நூலக சேவை நடாத்தப்பட்டது இதில் 116 புத்தகங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளது.

### *SOND அமைப்பினால் மேற்கொள்ளப்பட்ட விசேட செயற்பாடுகள்.*

1. காந்தி கழக சிறுவர்களுக்கு நான்கு கணனி வகுப்புக்கள் **SOND** பணியாளரான ஜெனிதா அவர்களினால் நடாத்தப்பட்டது.
2. சிறுவர்களின் ஒய்வு நேரங்களை பயனுள்ள வழியில் கழிக்கும் வகையில் வாராந்த கலந்துரையாடலின் முடிவின் போது சிறுவர்கள் விளையாடுவதற்காக கரம் போட், **foot Ball** , **Cricket Bat** வழங்கப்பட்டுள்ளது.



SOND

## வளநிலைய பயன்பாடு

சமூகத்தில் வாசிப்புத் திறனை அதிகரிக்கும் பொருட்டு எமது அமைப்பில் மக்களுக்கான நூலக சேவை செய்யப்பட்டு வருகின்றது. இதனடிப்படையில் இம்மாதம் சிறுவர், இளையோர், நிறுவனப் பணியாளர்கள், SOND பணியாளர்கள்,அரசாங்க ஊழியர்கள் ஆகியோர் இம்மாதம் 13 தலைப்பில் 143 புத்தகங்களை பயன்படுத்தியுள்ளார்கள்.



## வருடாந்த ஒன்று கூடல்

எமது அமைப்பினால் ஒவ்வொரு வருடமும் ஆண்டு இறுதி நிகழ்வில் அடுத்த வருடத்தினை வரவேற்பதற்கான நிகழ்வு நடாத்தப்படுவது வழக்கம். இவ் வருடமும் 2013.12.31 ம் திகதி அக்கரைப்பற்று SOND அலுவலகத்தில் இந் நிகழ்வு நடை பெற்றது இந் நிகழ்வின் போது கலை நிகழ்வுகள் சிறுவர், இளையோரினால் நிகழ்த்தப்பட்டது. இதில் நிறுவன, அரச பணியாளர்கள், பாலர் பாடசாலை ஆசிரியர், சிறுவர்கழகத்தின் உறுப்பினர்கள், அவர்களுடைய பெற்றோர் போன்றோர் கலந்து கொண்டுள்ளார்கள்.







SOND

# பணியாளர் கலந்துரையாடல்

**SOND** அமைப்பினுடைய 2014ம் வருடத்தின் செயற்பாடுகள் தொடர்பான கலந்துரையாடல் 2013.12.31 ம் திகதி நிறைவேற்றுப் பணிப்பாளர் ச. செந்தூராசா தலைமையில் அக்கரைப்பற்று **SOND** அலுவலகத்தில் நடை பெற்றுள்ளது. இதில் மட்டக்களப்பு, அக்கரைப்பற்று **SOND** அலுவலகப் பணியாளர்கள் 10 பேர் கலந்து கொண்டுள்ளார்கள்.



# யாழ் மாவட்டத்தின் செயற்பாட்டுவிபரம்

## மிதிவெடி அபாயக்கல்வி செயற்திட்டடம்

மிதிவெடி அபாயக்கல்வி செயற்திட்டத்தின் கீழ் மிதிவெடி மற்றும் வெடிக்காத வெடிபொருட்களினால் பாதிக்கப்பட்ட 07 பேருக்கு வாழ்வதார உதவி வழங்கும் நிகழ்வு 15.12.2013 அன்று எமது SOND அலுவலகத்தில் நடைபெற்றது.






## வருடாந்த ஒன்றுகூடல்

வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வு SOND நிறுவன மண்டபத்தில் 27.12.2013 பணிப்பாளர் திரு.ச.செந்துாசா தலைமையில் நடைபெற்றது. இதில் மத தலைவர்கள், அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவன பணியாளர்கள், தொண்டர்கள், கலந்துகொண்டனர். இதில் கலைநிகழ்வுகளும் இடம்பெற்றது.







# மட்டக்களப்பு மாவட்டத்தின் செயற்பாட்டுவிபரம்

## மரநடுகை

ஆரையம்பதியில் மண்முனைப்பற்று பிரதேச சபையுடன் இணைந்த பிரதான வீதியின் நடுப்பகுதியில் மரங்கள் நடும்பணி ஆரம்பித்து நிறைவடைந்துள்ளது. 42 மரங்கள் நடப்படுவதற்கான திட்டமிடலின் கீழ் 21 சித்திரை வேம்பு மரங்கள் நாட்டப்பட்டு பதாதைகள் பொருத்தியதுடன் இலக்கத்தகடுகளும் பொருத்தப்பட்டது. அது போன்று ஊறணியில் இருந்து பிள்ளையாரடி வரை நடப்பட்ட 45 மரங்களுக்கும் இலக்கத்தகடு போடப்பட்டது. ஊறணிச்சந்தி முதல் கல்லடி மணிக்கூட்டுக் கோபுரம் வரை நடுப்பகுதியில் நடப்பட்ட மரங்களுக்கு பசளை போடப்பட்டதுடன் கிருமி நாசினியும் விசுறப்பட்டு மரங்கள் பராமரிக்கப்பட்டன.

## அனர்த்த முன்னாயத்த ஒத்திகை நிகழ்வு

உயிர்களை மாய்க்கும் இயற்கையின் சீற்றத்தில் இருந்து அனைத்து உயிர்களையும் காப்பாற்றி கொள்ள வேண்டும் எனும் நோக்குடன் டயக்கோணியா நிறுவனத்தின் நிதி உதவியுடன் மட்டக்களப்பு சொண்ட் நிறுவனமானது பட்டிப்பளை பிரதேச செயலக பிரிவில் முதலைக்குடா, முனைக்காடு போன்ற மொத்தமாக 07 கிராமத்தில் முதற்கட்டமாக ஒரு அனர்த்த முன்னாயத்த ஒத்திகை நிகழ்வினை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்துடன் இணைந்து அக் கிராமத்தில் முன்னர் தெரிவு செய்யப்பட்டிருந்த அனத்த முன்னாயத்த குழுக்களின் ஒத்துழைப்புடன் நாடாத்தப்பட்டது.

இந் நிகழ்வு 10.12.2013 முனைக்காட்டிலும், 13.12.2013 திகதி முதலைக்குடாவிலும் நடைபெற்றது. இதன்போது மக்களிடம் அனர்த்தம் ஏற்படும் போது எவற்றினை பாதுகாப்பாக எடுத்துச் செல்லவேண்டும். பாதுகாப்பான இடமாக கருதும் இடங்கள் பற்றியும் அனைவரையும் காப்பாற்றி கொள்ளும் வகையில் தகவல்களை பரிமாறிக் கொள்ளும் வழிமுறைகள் என்பனவும் கலந்துரையாடப்பட்டது.





SOND



## தொலைநோக்கு

"புதிய சமூகம் உருவாக்குவோம்"

## பணிநோக்கு

சமூகத்தில் உள்ள சகல தரப்பினரையும் நிறுவனங்களுக்கும் உதவி வழிகாட்டி சமூக மாற்றத்தின் வேலைத்திட்டங்களில் வலுவூட்டிப் பங்காளிகளாக்கி சமூக மாற்றச் செயற்பாடுகளில் பங்கு கொள்ளவைத்தல்.